2010 ஏப்ரல் 19]

ஆட்சித் தலைவரிடத்திலே நான் நேரடியாகத் தொடர்புகொண்டு, உடனடியாகக் கேரள மாநிலத்திலே இருக்கக்கூடிய அந்தச் சட்ட விதிமுறைகளைப் பெற்று, உங்களுடைய கருத்தையும் பரிந்துரை செய்து அனுப்புங்கள் என்று சொன்னேன். ஐந்து நாட்களுக்குள் அவரும் அனுப்பிவிட்டார். அது இப்பொழுது அரசாங்கத்தினுடைய பரிசீலனையில் இருந்துகொண்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 52, மாண்புமிகு உறுப்பினர் திரு. வே. மாரிமுத்து, மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

52—

நீதிமன்ற வளாகம்

***59279—திரு. வே. மாரிமுத்து:**

மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினத்தில் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. துரைமுருகன், சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ): நாகப்பட்டினத்தில் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் அமைப்பதற்கான செயற்குறிப்பு, சென்னை உயர் நீதிமன்றத்திலிருந்து பெறப்படும் முன்னுரிமைப் பட்டியலில் இடம்பெறும் பட்சத்தில், நிலம் கையிருப்பு மற்றும் அரசின் நிதிநிலைமைக்கேற்ப அரசு தக்க நடவடிக்கை மேற்கொள்ளும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வே. மாரிமுத்து.*

திரு. வே. மாரிமுத்து: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது நாகையிலே இயங்கிக் கொண்டிருக்கக்கூடிய நீதிமன்ற வளாகத்தில் மாவட்ட நீதிமன்றம், தலைமை நீதித் துறை*

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

நடுவர் மன்றம், சார்பு நீதிமன்றம், மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், நீதித் துறை நடுவர் மன்றம்-1, 2 ஆகிய நீதிமன்றங்கள் இயங்கிக்கொண்டிருக்கின்றன. 1996-ல் Criminal Court புதியதாகக் கட்டுவதற்காக ஒரு கோடி ரூபாய் மதிப்பீட்டில் அரசுக்குப் பரிந்துரை செய்யப்பட்டது. ஆனால், அதற்குப் பிறகு அந்தப் பரிந்துரை என்ன ஆனது என்று தெரியவில்லை. ஆனால், தற்போது அந்த நீதிமன்ற வளாகத்தில் செயல்பட்டுக் கொண்டிருக்கக்கூடிய Munsif Court அதனுடைய கட்டடத்தில் விரிசல் ஏற்பட்டு, மழைக் காலங்களில் நீர் கசியக்கூடிய ஒரு சூழல் உருவாகி இருக்கிறது. அதோடு நீதிமன்றம் செயல்பட்டுக் கொண்டிருக்கக்கூடிய கட்டடங்களுக்கு அருகில் வட்டாட்சியர் அலுவலகம், வட்ட வழங்கல் அலுவலகம், பதிவுத் துறை அலுவலகம், மாவட்ட சிறைச்சாலை இப்படிப்பட்ட அலுவலகங்கள் இருக்கின்ற காரணத்தினாலே, ஜனத்திரள் என்பது அதிகமாகக் கூடுகிற பகுதியாக அது மாறியிருக்கிறது. இது நீதிமன்றச் செயல்பாட்டுக்கும் இடையூறாக இருக்கிறது. எனவே, இத்தகைய இடையூறுகளைக் களைவதற்கு நாகையிலே உடனடியாக ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் அமைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா எனத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: பேரவைத் தலைவர் அவர்களே, பலமுறை இந்த மாமன்றத்திலே நான் எடுத்துச் சொல்லியிருக்கிறேன். புதியதாக ஒரு நீதிமன்றம் துவக்க வேண்டும் என்றாலும், அல்லது ஓர் இடத்திலே ஒருங்கிணைந்த நீதிமன்றம் கட்டப்பட வேண்டும் என்றாலும், உயர் நீதிமன்றத்தினுடைய பரிந்துரையின் அடிப்படையில்தான் அரசு அந்தப் பணியை மேற்கொள்ளும். எனவே நாகப்பட்டினத்தில் அந்த Court இருக்கிற நிலைமையை உயர் நீதிமன்றம் உணரும். மாண்புமிகு உறுப்பினர் சொன்ன கருத்துகளை நான் மறுக்கவில்லை. எனவே, மாண்புமிகு உறுப்பினருடைய கருத்தும், உயர் நீதிமன்றத்திற்குத் தெரிவிக்கப்படும். அவர்கள் ஒரு பட்டியல் தயார் செய்து, இந்தந்த நீதிமன்றங்களை எடுத்துக்கொள்ளலாம் என்று அரசுக்குப் பரிந்துரை செய்வார்கள். அந்தப் பட்டியலிலே வருகின்றவற்றிலிருந்துதான் அரசு அடுத்த நடவடிக்கையை மேற்கொள்ளும்.

2010 ஏப்ரல் 19]

முற்பகல் 9-45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வே. மாரிமுத்து.*

திரு. வே. மாரிமுத்து: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது செயல்பட்டுக் கொண்டிருக்கக்கூடிய அந்த நீதிமன்ற வளாகம், பௌத்தர்கள் தங்கி வழிபட்ட இடம். பிறகு, ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் நீதிமன்றமாக மாற்றப்பட்டது. தற்போதுகூட நீதிமன்ற விரிவாக்கத்திற்காக அஸ்திவாரம் போடுகிறபோது கீழே பாதாள அறைகள் எல்லாம் இருப்பதாக தொல்லியல் துறை அதிகாரிகள் பல முறை வந்து ஆய்வு நடத்தியிருக்கிறார்கள். எனவே, தற்போது நீதிமன்ற வளாகம் செயல்பட்டுக் கொண்டிருக்கக்கூடிய அந்த இடம் தொல்லியல் துறை ஆய்வுக்கு உட்படுத்தப்பட வேண்டிய இடமாகவும் இருக்கின்ற காரணத்தினாலே முன்னுரிமை அளித்து ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் அமைத்துத் தருவார்களா என்று மீண்டும் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்த இடம் தொல்லியல் துறைக்குச் சம்பந்தப்பட்டிருக்கிறது என்று தெரிவித்திருக்கிறார்கள். இந்தக் கருத்தும் உயர் நீதிமன்றத்திற்குத் தனிப்பட்ட வகையிலே தெரிவிக்கப்படும். பிறகு அவர்களுடைய அறிவுரையின்படி அரசு நடவடிக்கை எடுக்கும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 53, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. சண்முகவேலு, மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

53—

பலவகை தொழில்நுட்பக் கல்லூரி

***102932—திரு. சி. சண்முகவேலு:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டத்தில் பலவகை தொழில்நுட்பக் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?